# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 1053/2016/ந

ஆணை எண்: 171/2017

நாள்: 23/06/2017

திரு. சிச. சிபிசக்கரவர்த்தி, – முறையீட்டு மனுதாரர்
19, மாலைக்கட்டி தெரு,
சிதம்பரம், கடலூர் மாவட்டம் - 608 001.

திரு. S. ஜெகதீசன்,
ஆணையர்,
சிதம்பரம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. சிச. சிபிசக்கரவர்த்தி என்பவரது 08.10.2016 நாளிட்ட முறையீட்டு மனு 13.10.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.1053/16 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு-5, பிளாக் எண்.10, ந.அ.எண்.774, கதவு எண்.12, சோமசுந்தரம் தெரு மற்றும் ந.அ.எண்.778 எண்.15A மன்னார்குடி தெருவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு மாறாக அப்பட்டமான விதி மீறலாக 24 அடுக்கு மாடி குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும் இதனை சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு புகார் செய்தும்

நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநரது 14.09.2016 நாளிட்ட கடிதத்தில் அரசாணை எண்.289 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:16.12.10ன்படி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியும் நகராட்சி ஆணையரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறையீட்டு மனு குறித்தான தற்காப்பு அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவ 17.10.16 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. மேலும், 23.11.2016 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணக்கு ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை அளிக்குமாறு முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணையும் (அ.ம.எண்.1053/16/ந நாள்:27.10.2016ல் அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வரப்பெற்ற மனுதாரரது 19.11.2016 நாளிட்ட கடிதத்தில் மேற்படி விசாரணைக்கு தன்னால் நேரில் ஆஜராக இயலாத நிலையில் உள்ளதாகவும் தனது முறையீட்டு மனுவையே வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளுமாறும் முறையீடு பெறப்பட்டது. இதனிடையே சிதம்பரம் நகராட்சி ஆணையரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கை ந.க.எண்.3835-2016-எப்1, நாள்:03.11.2016ல், புகாரில் கூறப்பட்ட கட்டிடத்திற்கு 02.02.2009ம் தேதியிட்ட உத்தரவின்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளதெனவும், வரைபடத்திற்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டு வந்ததால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 205(1)(2)ன்படி 09.03.2010 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அசல் மனு எண்.1053/2016/ந நாள்:28.11.16ன்படி 14.12.2016 அன்று விசாரணைக்கு அஜராகி விளக்கம் அளிக்குமாறு சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

அதன்படி விசாரணைக்கு ஆஜரான நகராட்சி ஆணையாளர் தாக்கல் செய்துள்ள பதிலறிக்கையில் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடம், வரைபடத்திற்கு மாறாக விதி மீறலாக கட்டப்பட்டுள்ளதான புகார் குறித்து ஸ்தல ஆய்வு செய்து விசாரித்ததாகவும் அக்கட்டிடம் தரைதளம் மற்றும் இரண்டு தளங்கள் கொண்டதாக அனுமதித்தவாறு கட்டப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கட்டிட வரைபடத்திற்கு மாறாகவும், கூடுதல் அளவுகள் மற்றும் திறவிடங்கள் விடாமலும் கட்டப்பட்டுள்ளதெனவும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 205 (1), (2) மற்றும் 205 (3)ன்படி அறிவிப்பு வழங்கப்பட்டு, சிதம்பரம்

குற்றவியல் நடுவர் மன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யும் நிலையில் உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அசல் மனு எண்.1053/2016/ந-2, நாள்:11.01.2017ன்படி 15.02.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் புகாரில் குறிப்பிட்ட கட்டிட அனுமதிக்கு புறம்பாக கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடத்தினால் நகராட்சிக்கு 2009-ஆம் ஆண்டிலிருந்து வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ச.எண்.778ல் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வரி விதிப்பு எண்.13885ன்படி அரையாண்டு வரியாக ரூ.5206/-ம் ச.எண்.774ல் அடுக்கு மாடி குடியிருப்புக்கு வரி விதிப்பு எண்.13884ன்படி அரையாண்டுக்கு ரூ.11,820/- என குறைவாக வரி விதிக்கப்பட்டுள்ளதெனவும் புகார் தெரிவித்துள்ளார். மேலும், பாதாள சாக்கடை இணைப்பு கட்டணம், மேம்பாட்டு கட்டணம் போன்றவற்றிலும் ஒரே இணைப்பு தொகையாக காண்பித்து குடியிருப்புகளின் எண்ணிக்கைக்கேற்ப கட்டப்பட வேண்டிய தொகை கட்டப்படவில்லை எனவும் கட்டிட உரிமையாளரிடம் நகராட்சி அலுவலர்கள் கையூட்டு பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் புகார் அளித்துள்ளார். இப்பொருள் குறித்து விசாரணை அதிகாரி/ஆய்வு அலுவலர் ஒருவரை நியமித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி வாக்குமூலம் தொடர்பாக கூடுதல் அறிக்கை சமர்ப்பித்திடுமாறு சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை முறையீட்டு மனு எண்.1053/16/ந நாள்:16.2.2017 மற்றும் 10.3.2017ல் ஆணையிடப்பட்டது.

அதன்படி 27.03.2017 அன்று வரப்பெற்ற சிதம்பரம் நகராட்சி ஆணையாது பதிலறிக்கையில் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள தொகுதி எண்.5, பகுதி எண்.10, நகரளவு எண்.774, கதவு எண்.12, சோமசுந்தரம் தெரு மற்றும் நகரளவு எண்.778, கதவு எண்.15A மன்னார்குடி தெருவில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் நகராட்சி கட்டிட அனுமதிக்கு 21.01.2009ல் விண்ணப்பம் செய்யப்பட்டு முறையே 14/2009, நாள்:02.02.2009, கட்டிட அனுமதி 15/2009 என கட்டிட அனுமதி தரை, முதல் மற்றும் இரண்டாம் தளத்திற்கும் அனுமதி பெறப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டு, 2010ல் வரி விதிப்பு செய்யப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வரைபட ஒப்புதலின்படி 3 தளங்கள் கொண்ட ஒரே கட்டிடமாகத்தான் கட்டப்பட்டுள்ளதெனவும் 24 அடுக்கு என்பது தவறானதாகுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அனுமதி பெற்றது 3 அடுக்குமாடி ஒரே குடியிருப்புதான் எனவே ஒரே வரிவதிப்பு செய்யப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தல ஆய்வு/விசாரணையில் கண்டறியப்பட்ட மாறுபாடுகளுக்காக சட்ட ரீதியான அறிவிப்பு வழங்கப்பட்டதை பெற்றுக்கொண்டு அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை முறைபடுத்திக்கொள்ள உரிமையாளர் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிமையாளரை கட்டணங்கள் வரைபடத்தில் கண்டுள்ள கட்டிட பரப்பளவின் அடிப்படையிலேயே வசூல் செய்யப்படுகிறதெனவும் கட்டிட அனுமதிக்கு மாறாக அல்லது கூடுதலாக கட்டுமானம் இருப்பின் அதன் மீது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதெனவும், பாதாள சாக்கடை திட்டப் பணிகளில் குடியிருப்புதாரர்களிடமும் கூடுதல் வைப்புத் தொகை வசூலிக்கப்பட வேண்டியுள்ளது எனவும் இந்நேர்வில் குடியிருப்பிற்கான வைப்புத் தொகை வசூல் செய்யப்படுமென உறுதி அளிக்கப்பட்டுள்ளது. கட்டிட உரிமையாளரிடம் லஞ்சம் பெற்றதாக குறிப்பிட்டுள்ள புகார் பொய்யானது என தெரிவித்து முற்றிலும் மறுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சி தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களைப் பரிசீலிக்கையில் புகாரில் குறிப்பிட்டுள்ள கட்டிடத்திற்கான வரைபட அனுமதி 02.02.2009ல் அதாவது எட்டு ஆண்டுகளுக்கு முன்னதாக வழங்கப்பட்டுள்ளது. கட்டிட வரைபடத்திற்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டு வருவது தெரிந்து 09.03.2010ல் முதல் அறிவிப்பு நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் 27.09.2016ல் தான் சுமார் 6 ஆண்டுகள் கழித்து தான் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கை விதி முறைகளின்படி அந்தந்த காலக்கட்டங்களில் எடுக்கப்படவில்லை எனத் தெளிவாகிறது. இந்நிலையில் கட்டுமானம் முடிவுற்று வரி விதிப்பு செய்யப்படும்போது அனுமதிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்ட/கூடுதல் கட்டுமானம் ஏன் கணக்கில் கொள்ளப்படவில்லை என்பதற்கான விளக்கம் அளிக்கப்படவில்லை.

எனவே, இது போன்ற மெத்தனமான, பொறுப்பற்ற நடவடிக்கைக்கு பொறுப்பான அலுவலர்களைக் கண்டறிந்து துறை வாரியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென

இம்முறைமன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும், முறையீட்டு மனுதாரரது கோரிக்கையினை ஏற்று இப்பொருள் குறித்து ஸ்தல ஆய்வு செய்தும், அனைத்து தொடர்புடைய ஆவணங்களை ஆய்வு செய்தும், உரிய விசாரணைகள் மேற்கொண்டு விதி மீறல்கள் மற்றும் நகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதும் ஏற்பட்டுள்ளதா என்பதை சட்ட/விதிமுறைகளுக்கேற்ப பரிசீலித்து அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களடங்கிய அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும் இம்முறைமன்ற நடுவத்திற்கும் இரண்டு மாதங்களுக்குள் சமர்ப்பித்திடுமாறு செங்கற்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6 (4) (a) மற்றும் 12ன் கீழ் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

முறையீட்டு மனுவின் நகல் நகராட்சி ஆணையரது அறிக்கைகளின் நகல்கள், வாக்கு மூலங்களின் நகல்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

மேலும், முறையீட்டு மனுதாரர் இப்பொருள் குறித்து முறையீடு ஏதுமிருப்பின் மேற்படி விசாரணை அலுவலரான செங்கற்பட்டு மண்டல, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் தாக்கல் செய்து கொள்ளலாமெனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/ [signature]

செயலாளர்.

பெறுநர்

1) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம்,
செங்கற்பட்டு மண்டலம்.

2) நகராட்சி ஆணையர்,
சிதம்பரம் நகராட்சி,
சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

3) திரு. சிச. சிபிசக்கரவர்த்தி,
19, மாலைக்கட்டித் தெரு, சிதம்பரம்,
கடலூர் மாவட்டம் - 608 001.

29.6.17

3/7/17